


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக சுற்றுசூழல் தினத்தை (ஜுன் 5) முன்னிட்டு, பள்ளி கல்வித்துறை சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (06.06.2016) கொடியசைத்து, துவக்கிவைத்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ச.மதியழகன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 329/2016 நாள்: 06.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக சுற்றுசூழல் தினத்தை (ஜூன் 5) முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை இன்று (06.06.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுற்றுசூழலை தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்திட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக சுற்றுசூழல் தினத்தை (ஜூன் 5) முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (06.06.2016) கொடியசைத்து, துவக்கிவைத்து தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 35 சதவீதம் வனப்பகுதிகள் உள்ளது. இதனை பாதுகாப்பதை குறித்தும், பிளாஸ்டிக்கை ஒழிப்பதை குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் இன்று பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேரணியானது எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் துவங்கி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வழியாக ஹோம் சர்ச் பள்ளி சென்று நிறைவடைந்தது. பேரணியில் (எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஹோம் சர்ச் பள்ளி) சுமார் 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு பதாகைகளை ("மரம் நடுவோம் மழை பெறுவோம்", "வளர்ப்போம் வளர்ப்போம் வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்", "மட்கும் குப்பையை சேகரிப்போம் மனித வாழ்வுக்கு பயன்படுத்துவோம்", "மாசு இல்லாத உலகம் மனிதர் வாழும் இல்லம்", மரம் வளர்ப்போம், நீர்நிலைகளை காப்போம்") கையில் ஏந்தியபடி பேரணியில் கலந்துகொண்டனர் என தெரிவித்தார்.

முன்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், எஸ்.எல்.பி. பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

பேரணியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ச.மதியழகன், சுற்று சூழல் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயகுமார், உதவி திட்ட அலுவலர் திரு. வில்வம், எஸ்.எல்.பி தலைமையாசிரியர் திரு. விஜயன், மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு. ஆறுமுகம்பிள்ளை, இந்திய செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் மரு. நாகேந்திரன், ஹீல் தொண்டுநிறுவனத்தின் இயக்குனர் திரு. ஒய். சிலுவை வாஸ்த்தியன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.